| | | | | |
|---|---|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | |
| மாவட்டம் : | **புதுக்கோட்டை** | காலம் : | **26/06/2024** முதல் **30/06/2024** | |
| அறிக்கை எண் : | **051/ 2024** | வெளியீட்டு நாள் : | **25/06/2024** | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (20.06.2024 முதல் 24.06.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 30-06-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20/06 | 21/06 | 22/06 | 23/06 | 24/06 | **தேதி** | **நாள்-1** 26/06 | **நாள்-2** 27/06 | **நாள்-3** 28/06 | **நாள்-4** 29/06 | **நாள்-5** 30/06 |
| 6.4 | 0.7 | 0.0 | 4.4 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 36 | 35 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 35 | 35 | 36 | 36 |
| 26 | 26 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 26 | 26 |
| 7 | 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 6 | 6 | 5 |
| 82 | 75 | 80 | 67 | 67 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 59 | 51 | 65 | 89 | 56 | | 60 | 50 | 50 | 40 | 30 |
| 13 | 30 | 24 | 18 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 12 | 16 |
| மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென்மேற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 26 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 16 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(28ஜூன்-04 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பானது முதல் முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 26 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**விவசாயம் :**

பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நிலக்கடலை, முருங்கை, கால்நடை.**

**நிலக்கடலை:**

நிலக்கடலையில் ஜிப்சம் இடுதல் நல்ல பயனை அளிக்கும். இரவை பயிருக்கு ஒரு எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் வீதம் 40-45வது நாளில் இட வேண்டும்.

மானாவாரிப் பயிருக்கு 40-75வது நாளில் செடிகளின் ஓரமாக மண்ணின் ஈரத்தன்மையைப் பொறுத்து இட வேண்டும்.

மண்ணைக் கொத்தி ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். கால்சியம் மற்றும் கந்தகக் குறைபாடுள்ள நிலங்களில் ஜிப்சம் இடுதல் நல்ல பலனைத் தரும்.

**முருங்கை:**

தற்போதைய வளர்ச்சி நிலையில் செடி முருங்கையில் களைக்கட்டுப்பாடு மற்றும் பின் செய் நேர்த்தி முறைகளை கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அதாவது விதைத்து இரண்டு மாதங்கள் வரை நிலத்தை களையின்றி பராமரிக்க வேண்டும் .பின் செடிகள் மூன்றடி உயரம் வளர்ந்த பிறகு மாதம் ஒரு முறை அல்லது தேவைப்படும் போது களையெடுக்க வேண்டும்.

மேலும் செடிகள் சுமார் 1 முதல் 2 மீட்டர் உயரம் வளர்ந்தவுடன் நுனியைக்கிள்ளி விட வேண்டும். இவ்வாறு செய்வதனால் பக்கக்கிளைகள் அதிகமாகத் தோன்றி பூக்கள் மற்றும் காய்ப்பு அதிகரிக்கும். செடியின் உயரமும் குறைந்து அறுவடைக்கு வசதியாக இருக்கும்

**கால்நடை:**

**கால்நடை:**

கால்நடைகளைத் தாக்கும் தொண்டை அடைப்பான் நோயானது பெரும்பாலும் மழைக் காலங்களிலேயே மிகுதியாக காணப்படுகிறது. கறவை மாடுகள் குறிப்பாக எருமை மாடுகள், கலப்பினப் பசுக்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

இந்நோய் தாக்கிய கால்நடைகளுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுவதுடன தலை, கழுத்து, தொண்டை, மார்பு போன்ற பகுதிகளில் வீக்கமும் ஏற்படும்.

இந்த நோயின் கிருமிகள் ஈரப்பதமான மற்றும் நீர் நிறைந்த நிலைமைகளில் நீண்ட காலம் உயிர்வாழும்.

இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக் காலத்திற்கு முன்பே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியம் ஆகும்.